**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**22 |
| Name | : | **குப்புமணி** |
| Husband Name | : | **சுப்பிரமணியன்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 35/2025 |

**<u>தேதி : 15.04.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். அ.சா.15 முதல் அ.சா.21 வரை தெரியும். எதிரி எனக்கு லோன் வாங்கிகொடுத்த வகையில் பழக்கமானார். எதிரி தனது மாமனாரின் மருத்துவ செலவிற்காக லோன் வாங்கி தருமாறு கேட்டதால் நான் Equitas தனியார் நிதிநிறுவனத்திடமிருந்து ரூ.50,000/- கடன் வாங்கிகொடுத்தேன். தவணை தொகைகளை எதிரியே கட்டிவிடுவதாக சொன்னதை நம்பி நான் கடன் வாங்கிகொடுத்தேன். எதிரி இரண்டு, மூன்று தவணைகளை கட்டினார். அதன்பிறகு கட்டவில்லை. கடனுக்கான அட்டையை எதிரி வைத்துக்கொண்டு தவணை தொகையை செலுத்திவந்தார். நிதி நிறுவனத்தினர் என்னுடைய வீட்டிற்கு வந்து தவணை தொகைகளை கட்ட சொன்னார்கள். அதன்பிறகு நான்எதிரியின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது எதிரி வீட்டில் இல்லை. இதுபோல் நிறைய பேர்களை எதிரி ஏமாற்றி உள்ளதாக தெரிந்துகொண்டேன். தவணை தொகைகளை நான்தான் தற்போது

கட்டிவருகிறேன் சத்தியா என்பவர் புகார் அளித்தார். புகார் கொடுக்கும்போது நானும் மற்றும் 30 பேர்கள் சென்றிருந்தோம். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நானும், எதிரியும் முதல் லோன் வாங்கும்போது சேர்ந்து வாங்கினோம். அந்த வகையில் எனக்கு அவர் பழக்கம். வசந்தியோடு சேர்ந்து நான் 4 லோன்கள் வாங்கி கட்டியதில் அவர் எனக்கு பழக்கம். எதிரியின் மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்று பணம் கேட்டார். எதிரியின் கையில் ரூ.50,000/- பணமாக கொடுத்தேன். எதிரி முதல் மூன்று தவணைகள் கட்டியிருந்தார். இதற்கு முன்பு எதிரி பணம் வாங்கி ஏமாற்றவில்லை என்றால் சரிதான். நாங்கள் 39 பேரும் ஒரே நேரத்தில் சென்று பணம் கேட்டதால் தவணை தொகையை எதிரியால் கட்டமுடியவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகைகளை திரும்ப செலுத்தினால் வாங்கிகொள்வோம். எதிரி என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடனும், மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணமும் கிடையாது என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.